IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.76 /2020

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : வேலு | Caste | : - |
| Father Name | : ஆறுமுகம் | Calling | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 31th day of January, 2024.

1, 2 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. இவ்வழக்கு அட்டவணை சொத்தில் செக்பந்திகளாக குறிப்பிட்டுள்ளதில் 1, 2, 7 பிரதிவாதிகளின் பெயர்கள் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2–ல் கூட்டு பட்டா உள்ளது என்ற விவரத்தையும் அதில் எனக்கு சொந்தமான நிலத்தின் விஸ்தீரணமும் என் மனைவிக்கு சொந்தமான நிலத்தின் விஸ்தீரணமும் இவ்வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு எவ்வாறு என் மனைவியின் பெயரையும் சேர்த்து வா.சா.ஆ.2 வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனவே, பொய்யான சங்கதிகளுடன் வழக்கு சொத்து அனைத்தின் முழு உரிமையாளர் நான் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. அனைத்து சொத்தும் என்னுடையது தான்.

3. வழக்கு சொத்து விவரத்தில் வீடு உள்ளதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். என் வழக்குரையிலும், வீடு

கட்டியுள்ளதையும் அதை நான் அனுபவம் செய்து வருவதாகவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 27.03.2020 மற்றும் 25.09.2020 தேதிகளில் பிரதிவாதிகள் அனைவரும் வழக்கு சொத்தில் பிரச்சனை செய்ததாக கூறுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

4. இவ்வழக்கில் 26.09.2020 அன்று லத்தேரி காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தாக வழக்குரையில் கூறியுள்ளதற்கு அப்புகாரின் அசலையோ அல்லது நகலையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி அணிதா 2013ம் ஆண்டிலிருந்து காட்பாடியில் வசித்து வந்து பின்னர் 2021–பிப்ரவரி மாதம் முதல் கிளிதாண்பட்டறையில் வசித்து வருகிறார் என்றும், நான் வழக்கு தாக்கல் செய்யும் தேதியில் தொண்டான்துளசி கிராமத்தில் அவர் வசிக்கவில்லை என்றால் சரியல்ல.

5. 1ம் பிரதிவாதியின் கணவர் ராணுவத்தில் பணிபுரிகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, அவரின் மாமியாரிடம் நான் பிரச்சனை செய்ததால் 1ம் பிரதிவாதியின் கணவர் ராணுவ அதிகாரிகளின் மூலம் என் மீது மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்திருந்தார் என்றால் இல்லை. வழக்கு சொத்தின் மேற்கு புறத்தில் பழைய தொண்டான்துளசி கிராமத்திலிருந்து புதிய தொண்டான்துளசி கிராமத்திற்கு செல்ல வழக்கு தெற்கில் பாதை உள்ளது என்றால் நடை பாதை உள்ளது.

6. அந்த பாதையில் தான் தெற்கு மூலையில் சுடுகாடு அமைந்துள்ளது என்றால் இல்லை. அந்த பாதைக்கும் சுடுகாட்டிற்கும் சம்மந்தமில்லை. சுடுகாட்டிற்கு பிணங்களை எடுத்து செல்ல மாற்று

வழிக்காக ஊரை சேர்ந்த அனைவரும் அவர்களின் நிலங்களில் ஒரு பகுதியை வழிக்காக நிலங்களை கொடுக்க ஒப்புக்கொண்டனர் என்றும் அதன்படி 1, 2, 7 பிரதிவாதிகளும் அவர்களது நிலங்களை கொடுக்க ஒப்புக்கொண்டார்கள் என்றும், எனவே அவர்களை பழி வாங்கும் நோக்கில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

7. வழக்குரையில் நான் கூறியுள்ள தேதிகளில் பிரதிவாதிகள் அத்துமீறி நுழையவில்லை என்றும் அவ்வாறு செய்ய அவர்களுக்கு எந்த அவசியமும் இல்லை என்ற சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2–ல் குறிப்பிட்டுள்ள என் மனைவி ஜமுனாவும் இவ்வழக்கிற்கும் அவசிய தரப்பினர் என்றும் அவரை தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் என் மனைவி பெயரில் சொத்து எதுவும் இல்லை. என் மனைவி பெயரில் சொத்து இல்லை என்பதை காட்ட ஆதாரங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் வழக்கு சொத்தின் முழுமையாக விவரங்களை குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விவரத்திற்கும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த வழக்கு மூலமும் இல்லை என்பதால் 1, 2, 7 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

K VENKATESAN Digitally signed by K VENKATESAN Date: 2024.01.31 14:34:21 +0530

DISTRICT MUNSIF
KATPADI